Chenkaantal
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# Ethics of Life in Sangam Literature

**N.Syed Ali Fatima,** Assistant Professor, Department of Tamil, Bishop Caldwell College, Thoothukudi, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0001-8648-9190
**DOI: 10.5281/zenodo.6620789**

## Abstract

*Literature is a mirror that reflects life. The Tamil community of the Sangam period considered living a charitable life as the purpose of life. The Sanskrit literature contains a number of biological facts that do not refine human life. They firmly believed that the pursuit of virtue was a pleasure. Their fascination with the principles of living, lying, and telling the truth laid the foundation for creating a better moral society and sustaining life. Sangam period biology has embraced many. Love, heroism and human dimensions are established through literature through the activities of life. The main purpose of this study is to tell the biological facts contained in some of the eight volumes .*

**Keywords:** Ethics, Life, Sangam Literature.

**References**
[1] Manavazhagan. *Management in Sangam Literature*, Kavya Publishing, Chennai.
[2] Madhayan. B. *Family in Sangam Literature*, New Century Book House, Chennai.
[3] M. Varadarajan. *History of Tamil Literature*, Bari Station, Chennai.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சங்க இலக்கியங்களில் வாழ்வியல்

**நா. செய்யதலி பாத்திமா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை,
பிஷப்கால்டுவெல் கல்லூரி, தூத்துக்குடி தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-8648-9190
**DOI:**

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்தவல்ல வாழ்வியல் உண்மைகள் பலவற்றைச் சங்க இலக்கியங்கள் கொண்டுள்ளன. அறத்தின் வழியில் முயன்று தேடுவதே இன்பம் என்பதில் உறுதியாக நம்பிக்கை கொண்டனர். வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன், மெய் கூறுதல், என்ற கொள்கைகளில் அவர்களுக்கு இருந்த ஈர்ப்பு சிறந்த அறவழியிலான சமூகத்தை உருவாக்கி வாழ்வியலை நிலை நிறுத்துவதற்கு அடித்தளமாயிற்று. சங்க கால வாழ்வியல் என்பது பலரையும் அரவணைத்துள்ளது. வாழ்வின் செயல்பாடுகளால் காதலையும், வீரத்தையும், மனிதப்பரிமாணங்களையும் இலக்கியத்தின் மூலமாக நிறுவியிருக்கின்றனர். எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றில் உள்ள வாழ்வியல் உண்மைகளை கூறுவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்.*

**கருச்சொற்கள்:** சங்க இலக்கியம், எட்டுத்தொகை நூல்கள், வாழ்வியல்.

**முன்னுரை**

இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி எனலாம். சங்க காலத் தமிழ்ச் சமூகம் அற வழியில் வாழ்தலையே வாழ்வின் நோக்கமாகக் கருதியது. மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்தவல்ல வாழ்வியல் உண்மைகள் பலவற்றைச் சங்க இலக்கியங்கள் கொண்டுள்ளன. அறத்தின் வழியில் முயன்று தேடுவதே இன்பம் என்பதில் உறுதியாக நம்பிக்கை கொண்டனர். வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன், மெய் கூறுதல், என்ற கொள்கைகளில் அவர்களுக்கு இருந்த ஈர்ப்பு சிறந்த அறவழியிலான சமூகத்தை உருவாக்கி வாழ்வியலை நிலை நிறுத்துவதற்கு அடித்தளமாயிற்று. சங்க கால வாழ்வியல் என்பது பலரையும் அரவணைத்துள்ளது. வாழ்வின் செயல்பாடுகளால் காதலையும், வீரத்தையும், மனிதப்பரிமாணங்களையும் இலக்கியத்தின் மூலமாக நிறுவியிருக்கின்றனர். எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றில் உள்ள வாழ்வியல் உண்மைகளை கூறுவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும்

**குறுந்தொகை காட்டும் வாழ்வியல்**

உலகில் வாழும் அனைத்து உயிர்களும் இன்பத்தை நோக்கி நிற்கும். இன்பத்திற்கு தேவைப்படுவது பொருள் அப்பொருள் அறவழியில் வரவேண்டும் என்பது பண்டைத் தமிழரின் வாழ்வியல் அறநெறியாகும்.

**“வினையே ஆடவர்க்கு உயிரே வான்நுதல்**
**மனைஉறை மகளிர்க்கு ஆடவர் உயிரே” (குறுந்தொகை பாடல்-135)**

ஆடவன் ஒருவன் தனது பரம்பரை செல்வத்தைச் செலவு செய்ய கூடாது. அவனே உழைத்துத் தேடி தன் குடும்பத்தையும் சுற்றத்தையும் காக்கவேண்டும். அவ்வாறென்று பரம்பரை செல்வத்தைச் செலவு

செய்பவன் இறந்தவனுக்கு ஒப்பானவன் அதனை பாலை பாடிய பெருங்கடுங்கோ. "உள்ளது சிதைப்போர் உளரெனப் படா அர்"; (குறுந்தொகை பாடல்-283) என்கிறார்.

குறுந்தொகையில் ஒத்த அன்புடைய தலைவனும், தலைவியும் தங்களது காதலைப் பற்றி தோழியிடம் நிலத்தை விட பரந்ததாக வானை விட உயர்ந்ததாக நீரை விட ஆழமானதாக திகழ்கிறதெனக் கூறி தன் காதலின் அளவை வெளிப்படுத்துகிறாள்.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும்ஆர் அளவு இன்றே - சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (குறுந்தொகை பாடல்-3)**

என்கிறார் தேவகுலத்தார்.

இல்லறத்தை நல்லறமாகப் போற்றிய பேணுவதை இப்பாடல் மூலம் அறியலாம்.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅது உடீ,**
**குவளை உன்கண் குய்ப்புகை கமழக்**
**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்." (குறுந்தொகை-167)**

தலைவியின் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது. கணவன் மனைவி இருவரும் அன்பை ஒழுக வேண்டும் என்ற வாழ்வியல் வலியுறுத்துவதாக இப்பாடல் அமைகிறது.

**நற்றிணை காட்டும் வாழ்வியல்**

நல்ல ஒழுக்கங்களை கொண்டுள்ள நூல் நற்றிணை. ஐந்து திணைகளால் மனிதர்களின் வாழ்வியல் சிந்தனைகளை பாடியுள்ளனர். உண்மையான நட்பின் சிறப்பினை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது.

**"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பினும்**
**நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்." (நற்றிணை-355)**

மனித வாழ்விற்கு அடிப்படை உணவு என்பதை உணர்த்து வேளாண்மையை பெருக்கியிருக்கின்றனர். வேளாண்மைத் தொழிலுக்கு நீர்வளம் மிகவும் முக்கியமாகும். ஒரு நாட்டின் செல்வம் நீர்வளத்தை கொண்டே அமையும். இதனை கபிலரும், "நீரின்றியமையா உலகம் போல" (நற்றிணை-1) என்று குறிப்பிடுகிறார். நிலத்தைப் பண்படுத்தல், உரமிடுதல், நாற்றுநடுதல், அறுவடை செய்தல், மற்றும் பயிரிடுதல், விளைந்ததை பாதுகாத்தல், வேளாண்மைக்கு உதவக் கூடிய கருவிகள் பற்றியும் நற்றிணை தெளிவாக வேளாண்மை அறிவியல் பாடத்தை கற்பிக்கிறது.

**"அரிசால் மாறி அங்கன் அகல்வயல்**
**மாறுதல் உழுத ஈரர் செறுவின்" (நற்றிணை-210)**

என்ற பாடல் வரிகளில் பயிர்சுழற்சி முறையை சுட்டுகின்றன.

"விண்டு புரையும் புணர்நிலை நெருங்கூட்டுப்" (நற்றிணை-26) நெற்மணிகளை பாதுகாக்க நெற்கூட்டை பயன்படுத்திய செய்தியை இப்பாடல் உணர்த்துகிறது. யானை பன்றி போன்ற விலங்குகள் பயிர்களை புகுந்து அழிக்கும். இவ்விலங்குகளை விரட்ட நெகிழிஇ அடார் போன்ற கருவிகளை

பயன்படுத்தி உள்ளதை “ஒளி திகழ் நெகிழியர் கவணையர் வில்லர்.” (நற்றிணை-393) “சிறு பொறி மாட்டியாபெருங்கடல் அடார்.” (நற்றிணை-110) என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

**ஐங்குறுநூறு காட்டும் வாழ்வியல்**

சங்ககால மகளிரின் மனையற மாண்புகளில் முதன்மையானதாக விருந்தோம்பல் முன் வைக்கப்பட்டுள்ளது. விருந்தினரை வரவேற்று உணவு பரிமாறுவதே இல்லறத்தான் கடமை என்று தெளிவுறுத்துகிறார். விருந்தோம்பல் ஓர் இனிய பண்பாட்டு அறத்தை தம்பதிகளாக இணைந்தே செயல்படுத்த வேண்டும். பழங்கள் பழுத்த மரத்தில் பறவைகள் தங்குவது போல, வளம் மேம்பட்டால் தான் விருந்தினருக்கு உணவுவிட முடியும் என்பதை அவர்கள் உணர்த்துகின்றனர். அதனால் தான் இயற்கை செழிக்கவும் வேண்டியுள்ளனர். நெல் பல பொலிக! பொன்பெரிது சிறக்க (ஐங்குறுநூறு-1) விளைக வயலே! வருக இரவலர்! (ஐங்குறுநூறு-2) பால் பல ஊறுக! பகடுபல சிறக்க! (ஐங்குறுநூறு-3) பசி இல் ஆகுக! பிணிசேண் நீங்குக! (ஐங்குறுநூறு-4) விருந்தினர் வர வேண்டும். பசி நீங்க போக வேண்டும் என்பது சங்ககால மக்களின் விருப்பமாக இருந்துள்ளது. தலைவன் தலைவி காதல் மறுக்கப்பட்ட நிலையில், இருவரும் உடன் கொண்டு போதல் இயல்பு. அப்படி உடன் போக்கின் போது தலைவனையும் தலைவியையும் விருந்தினராக விருந்தோம்பிய செய்தி இப்பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**“கல்கெழு சிறப்பின் நம் ஊர்**
**எல் விருந்தாகிப் புகுகம் நாமே” (ஐங்குறுநூறு-396)**

**கலித்தொகை காட்டும் வாழ்வியல்**

மனித இனத்தை மாண்புடன் வாழ வைக்கும் அறக்கருத்துக்களை கொண்டு கவிதைக் கலைக்கு வரைவிலக்கணமாக விளக்குகிற பாடல்களைக் கொண்டது கலித்தொகை ஏறுதழுவிப் பெண்ணை மணந்து கொள்ளும் திருமண நிகழ்ச்சியை

**“கொல் ஏற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளேஇ ஆயமகள்**
**அஞ்சார் கொலைஏறு கொள்பவர் அல்லதை**
**நெஞ்சிலார் தோய்தற்கு அரிய உயிர்துறந்து**
**நைவாரே ஆயமகள்.” (கலித்தொகை பாடல்-453)**

என்ற பாடல் வழி ஆணுக்கு வீரம் ஒன்றே அழகாக சங்ககாலம் எண்ணியதை அறிய முடிகிறது.

**“அரிமாவும், பரிமாவும் களிறும் கராமும்**
**பெருமலை விடாரகத்து ஒருங்கு உடன் குழீ,**
**படுமலை ஆடும் வரையகம் போலும்” (கலித்தொகை 1-48)**

பலவகையான காளைகள் உரிய கோடுகளுடன் தொழுவத்தில் இருந்து உள்ளது. அவை காண்பதற்கு சிங்கமும், குதிரையும், களிறும் முதலையும் ஒருங்கே கூடி நிற்பது போல் காட்சியளிப்பதாக இப்பாடல் மூலம் அறியப்படுகிறது.

**புறநானூறு காட்டும் வாழ்வியல்**

*புறநானூறு* பாடல்களில் போர் அறங்கள், போர் உணர்வுகள் மட்டுமல்லாது வாழ்வியல் உண்மைகளையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. பகைவர்களை எதிர்த்து போரிட்டாலும் மன்னர்கள்

அறங்களை கட்டிக் காத்தனர். படையெடுப்பை முன் கூட்டியே பகைவர்களுக்கு தெரிவித்தனர். மன்னர்கள் போர் அறத்தைப் பின்பற்றிய செய்தியை இப்பாடல் வழி உணரலாம்.

**'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர் பெறாஅ தீரும்**
**எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின்." (புறம்-9)**

போர் வீரர்கள் தங்களுக்கென்று சில மரபுகளை பின்பற்றினர். சேரனது குடியில் குழந்தை இறந்து பிறந்தாலும் குறைபிண்டமாகப் பிறந்தாலும் வாளால் வெட்டிய பின்பே மண்ணின் புதைப்பர்.

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்." (புறம்-74)**

என்ற வரிகள் போரின் மரபை விளக்குகிறது.

**நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின். (புறம்-115)**
**யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா. (புறம்-192)**

அது போன்ற அரிய கருத்துக்களை கருவூலமாக கொண்டு புறநானூறு திகழ்கிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை நூல்கள் தனி மனிதனின் வாழ்வியலைப் பற்றி விரிவாக பேசுகிறது. மனிதனுக்கு தேவையான உழைப்பையும், இல்லறத்தையும், வேளாண்மை முறையையும், போர் பற்றிய செய்தியையும் இசைக்கருவிகளையும் இன்னும் பல சிறப்புகள் இந்நூல்களில் அடங்கியுள்ளன. பல யுகங்கள் கடந்தாலும் இவ்விலக்கியங்கள் அப்போதும் செம்மையாக வாழ்வதற்கு தன் பங்கை அளிக்கவல்லது. உலகம் சூழலும் வரை சங்க இலக்கியங்கள் பேசப்பட்டு கொண்டே தான் இருக்கும்.

**துணை நூற்பட்டியல்**

[1] மணவழகன். *சங்க இலக்கியத்தில் மேலாண்மை.* காவ்யா பதிப்பகம், சென்னை.
[2] மாதையன். பே. *சங்க இலக்கியத்தில் குடும்பம்.* நியுசெஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.
[3] மு. வரதராசன். *தமிழ் இலக்கிய வரலாறு.* பாரி நிலையம், சென்னை.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.